# مواقيت الصلاة

# ஐவேளைத் தொழுகையின் நேரங்கள்

ஆசிரியர்:
**கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்**
முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,
ம:.ஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.

*www.alsarhaan.com*
WWW.MAHADSUNNAH.COM

تاميلي தமிழ்

# ஐவேளைத் தொழுகையின் நேரங்கள்

ஐவேளைத் தொழுகையை அதற்கென குறிப்பிட்ட நேரத்தில் நிறைவேற்றுவது கடமையாகும்.

**நம்பிக்கை கொண்டோர் மீது தொழுகை நேரம் குறிக்கப்பட்ட கடமையாகவுள்ளது.** (4:103)

## லுஹர் தொழுகையின் நேரம்:

லுஹர் தொழுகையின் நேரம் சூரியன் உச்சியை விட்டு மேற்கு நோக்கிச் சாய்ந்ததிலிருந்து ஒவ்வொரு பொருட்களின் நிழலும் அது போன்ற அளவு வரும் வரை உண்டு.

இதை ஆரம்பத்திலேயே நிறைவேற்றுவது விரும்பத்தக்கது. உஷ்ணம் கடுமையாக இருந்தால் மாத்திரம் சற்று தாமதித்து தொழ முடியும் நபி (ஸல்) சொன்னார்கள்: உஷ்ணம் கடுமையாக இருந்தால் தொழுகையை சற்று குளிராக்கிக் கொள்ளுங்கள், நிச்சயமாக கடும் உஷ்ணம் நரகத்தின் உஷ்ணத்தில் உள்ளது.

## அஸ்ர் தொழுகை:

இது மத்திய தொழுகை என்றழைக்கப்படும். இது பற்றி திருமறை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகிறது:

தொழுகைகளை (குறிப்பாக) நடுத்தொழுகையை பேணிக் கொள்ளுங்கள் (தொழுகையின்போது)

அல்லாஹ்வின் முன்னிலையில் உள்ளச்சப்பாட்டுடன் நில்லுங்கள். (2:238)

## அஸர் தொழுகையின் நேரம்:

அஸர் தொழுகையின் நேரம் ஒவ்வொரு பொருட்களின் நிழலும் அது போல ஒரு அளவு வந்ததிலிருந்து சூரியன் மறையத்துவங்கும் வரை உண்டு.
அதாவது இதற்கு இரு நேரங்கள் உண்டு எனலாம்:

### *01. எல்லோருக்குமானது:*

அதாவது ழுஹர் தொழுகையின் நேரம் முடிந்ததில் இருந்து சூரியன் பொன்னிறமாகும் வரை.

### *02. இக்கட்டான நிலைமையில் உள்ளோருக்குரியது.*

அதாவது சூரியன் பொன்னிறமானதிலிருந்து மறையும் வரை இடைப்பட்ட நேரம் ஆகும். இதற்கு இக்கட்டான நேரம் என்று பெயர் சொல்லக் காரணம் இந்நேரத்தில் தவிர்க்க முடியாத காரணங்களால் தொழத் தவறியவர்களுக்கே இந்நேரத்தில் தொழமுடியும்.

## மஃக்ரிப் தொழுகையின் நேரம்:

மக்ரிப் தொழுகையின் நேரம் சூரியன் முழுமையாக மறைந்ததிலிருந்து மேற்கே செம்மை மறையும் வரை உண்டு.

இத்தொழுகையை ஆரம்ப நேரத்திலேயே அவசரமாக தொழுவது விரும்பத்தக்கது. முஸ்தலிபாவில் ஹாஜிகள் மாத்திரம் பிற்படுத்தலாம்.

## இஷா தொழுகையின் நேரம்:

இஷாத் தொழுகையின் நேரம் இரவின் பாதி வரை உண்டு என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

சிரமம் இல்லையெனில், இத்தொழுகையை பிற்படுத்தி அதன் நேரம் முடிவதற்கு சற்று முன்னர் நிறைவேற்றுவது விரும்பத்தக்கதாகும்.

இஷாவுடைய நேரத்திற்கு முன் உறங்குவதும் தொழுகை முடிந்ததன் பின்னால் அநாவசியமாக பேசிக்கொண்டிருப்பதும் வெறுக்கத்தக்க செயலாகும். நபி (ஸல்) அவர்கள் இஷாவுக்கு முன் உறங்குவதையும், தொழுகைகுப்பின் பேசிக் கொண்டிருப்பதையும் வெறுப்பவர்களாக இருந்தார்கள். (புகாரி:547)

## சுபஹ் தொழுகையின் நேரம்:

சுபஹ் தொழுகையின் நேரம் வைகறையிலிருந்து சூரியன் உதிக்கும் வரை உண்டு.

இத்தொழுகையை அவசரமாக ஆரம்பத்திலேயே தொழுவது விரும்பத்தக்கது.

அருமை சகோதரனே! தொழுகையை அதற்குரிய நேரத்தில் நிறைவேற்றுவதில் கவனமாக இரு, ஏனெனில்

அது அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான காரியங்களில் ஒன்றாகும். இப்ன் மஸ்ஊத் (ரழி) அறிவித்தார்கள்:

*நான் நபியவர்களிடம் அல்லாஹ்வுக்கு மிக விருப்பமான செயல் எது எனக் கேட்டேன் அதற்கு தொழுகையை உரிய நேரத்தில் தொழுவதாகும் என பதிலளித்தார்பகள்.* (புகாரி:7534)